பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4
03 08 2026 MONDAY 6.30 PM
<u>மாநிலச்செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

- டிஜிட்டல் பணப்பரிவர்த்தனை இதுவரை இல்லாத அளவிற்கு அதிகரித்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

- உச்சநீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க வகை செய்யும் சட்டத்திருத்த மசோதா மக்களவையில் இன்று நிறைவேறியது.

- இந்து சமய அறநிலையத்துறை தொடர்பான வெள்ளை அறிக்கை வெளியிடுவது குறித்து பரிசீலிக்கப்பட்டு வருவதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

- மதுரை மாவட்டம் மேலூர் அருகே இன்று நேரிட்ட சாலை விபத்தில் ஐந்து பேர் உயிரிழந்தனர்.

- 17 வயதுக்கு உட்பட்டோருக்கான உலக மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Sitender Malik தங்கப்பதக்கம் வென்றார்.

\- இனி விரிவான செய்திகள் --

<<<<<<<>>>>>>>

டிஜிட்டல் பணப்பரிவர்த்தனை இதுவரை இல்லாத அளவிற்கு அதிகரித்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், இதுதொடர்பாக வெளியான கட்டுரையையும் பகிர்ந்துள்ளார்.

கடந்த மாதத்தில் 29 லட்சத்து 88 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு டிஜிட்டல் பணப்பரிவர்த்தனை நடைபெற்றுள்ளதாக அந்த கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>>>

உச்சநீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க வகை செய்யும் சட்டத்திருத்த மசோதா மக்களவையில் இன்று நிறைவேறியது.

முன்னதாக, இந்த மசோதாவை தாக்கல் செய்து பேசிய சட்டத்துறை இணையமைச்சர் திரு அர்ஜுன் ராம் மெக்வால், உச்சநீதிமன்றத்தில் வழக்குகள் அதிகரித்து வருவதை கருத்தில்கொண்டு இந்த சட்டத்திருத்த மசோதா கொண்டுவரப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

நீதித்துறையின் சேவைகளை மேம்படுத்தும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இதன்மூலம், மக்களுக்கு குறித்த காலத்திற்குள் நீதி கிடைக்கும் என்றும் திரு அர்ஜூன் ராம் மெக்வால் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>>

உடல் உறுப்பு தானத்தில் சிறந்த மாநிலத்திற்கான விருது தமிழகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

சர்வதேச உடல் உறுப்பு தினத்தையொட்டி, இன்று புதுதில்லியில் நடைபெற்ற விழாவில் மத்திய இணையமைச்சர் திருமதி அனுப்பிரியா பட்டேல் இந்த விருதினை வழங்கினார்.

தமிழகத்தின் சார்பில் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு அருண்ராஜ் இந்த விருதினை பெற்றுக்கொண்டார்.

<<<<<<<>>>>>>>

இந்து சமய அறநிலையத்துறை தொடர்பான வெள்ளை அறிக்கை வெளியிடுவது குறித்து பரிசீலிக்கப்பட்டு வருவதாக அத்துறைக்கான அமைச்சர் திரு ரமேஷ் கூறியுள்ளார்.

இன்று திருச்சியில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

*(Sound Byte – ரமேஷ் – 45 Sec. )*

<<<<<<<>>>>>>>

தேர்தல் நேரத்தில் அளித்த வாக்குறுதியின்படி பயிர்க்கடனை தவெக அரசு முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும் என்று திமுக தலைவர் திரு மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், மேகதாது பிரச்சினை குறித்து விவாதிப்பதற்கு இதுவரை அனைத்துக்கட்சி கூட்டத்தை கூட்டாதது ஏன் என்று வினவியுள்ளார்.

கர்நாடகாவில் இதுதொடர்பாக அனைத்துக்கட்சி கூட்டம் நடைபெற்றதையும் அவர் அதில் சுட்டிக்காட்டியுள்ளார்.

குறுவை நிவாரண சிறப்பு தொகுப்பை தவெக அரசு அறிவிக்க வேண்டும் என்றும் திரு மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

<<<<<<<>>>>>>>

தேர்தல் நேரத்தில் அளித்த வாக்குறுதிகளை தவெக அரசு நிறைவேற்றவில்லை என்று பிஜேபி மாநிலத்தலைவர் திரு நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

ஈரோடு மாவட்டம் ஓடாநிலையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், சட்டம் – ஒழுங்கும் முறையாக பராமரிக்கப்படவில்லை என்று குறை கூறினார்.

தவெக நிர்வாகிகளே பாலியல் குற்றங்களில் ஈடுபடுவதாகவும் அவர் தெரிவித்தார்.

காவிரி பிரச்சினையை வைத்து அரசியல் செய்ய வேண்டிய அவசியம் பிஜேபி-க்கு இல்லை என்றும் திரு நயினார் நாகேந்திரன் கூறினார்.

<<<<<<<>>>>>>>

முதலமைச்சர் திரு விஜய் குறித்து அவதூறாக மிரட்டும் வகையில் பேசியது தொடர்பான வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள திமுக சட்டப்பேரவை உறுப்பினர் திரு மார்கண்டேயனுக்கு சென்னை உயர்நீதிமன்றம் நிபந்தனையுடன் கூடிய ஜாமீன் வழங்கியுள்ளது.

இதுதொடர்பான மனுவினை விசாரணை செய்த நீதிபதி திரு ஜி கே இளந்திரையன், இதற்கான உத்தரவினை பிறப்பித்தார்.

எதிர்காலத்தில் இதுபோல பேசப்போவதில்லை என்று தூத்துக்குடி நீதிமன்றத்தில் உத்தரவாதம் அளிக்க வேண்டும் உள்ளிட்ட நிபந்தனைகள் இந்த உத்தரவில் இடம்பெற்றுள்ளன.

<<<<<<<>>>>>>>

காவிரியில் தமிழகத்திற்கு உரிய நீரை விடுவிக்க கர்நாடக அரசுக்கு உத்தரவிடக்கோரி மாநில அரசு உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளது.

முதலமைச்சர் திரு விஜய் அறிவுறுத்தலின்படி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக தமிழக அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<<<<>>>>>>>

மதுரை மாவட்டம் மேலூர் அருகே இன்று நேரிட்ட சாலை விபத்தில் ஐந்து பேர் உயிரிழந்தனர்.

இந்த விபத்து காரணமாக மதுரை – சென்னை தேசிய நெடுஞ்சாலையில் சிறிது நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(Voice Byte – ரகுராஜா - 45 Sec. )*

<<<<<<<>>>>>>>

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த மூன்று தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென்மண்டல இயக்குநர் டாக்டர் வி ஆர் துரை தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் இதனை தெரிவித்த அவர், ஒரு சில பகுதிகளில் கனமழை பெய்யக்கூடும் என்றார்.

*(Sound Byte – வி ஆர் துரை - 54 Sec. )*

<<<<<<<>>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

*கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் நுகர்வோர் பாதுகாப்பு விழிப்புணர்வு பேரணியை ஆட்சியர் திருமதி பத்மஜா இன்று தொடங்கிவைத்தார்.*

---------------

*கடலூர் மாவட்டத்தில் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் கோரிக்கை மனுக்கள் மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுக்குமாறு ஆட்சியர் திரு சிபி ஆதித்ய செந்தில்குமார் அலுவலர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.*

--------------

*திண்டுக்கல் மாவட்டம் பழனியில் 100 கோடி ரூபாய் மதிப்பிலான நில மோசடி விவகாரத்தில் மேலும் இரண்டு பேர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.*

---------------

*விழுப்புரம் மாவட்டத்தில் காவல்துறை சார்பில் போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு இருசக்கர வாகன பேரணி இன்று நடைபெற்றது.*

---------------

*தென்காசி மாவட்டம் குற்றால அருவிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதால் சுற்றுலாப் பயணிகள் குளிப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.*

<<<<<<<>>>>>>>

***விளையாட்டுச் செய்திகள்***

*17 வயதுக்கு உட்பட்டோருக்கான உலக மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Sitender Malik தங்கப்பதக்கம் வென்றார்.*

*அஜர்பைஜானின் Baku-வில் நடைபெற்ற இப்போட்டியின் ஆடவர் 60 கிலோ எடைப்பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.*

*ஆடவர் 92 கிலோ எடைப்பிரிவில் Saksham வெண்கலப்பதக்கம் வென்றார்.*

*இப்போட்டியில் இந்தியா ஒரு தங்கம், 4 வெள்ளி, 8 வெண்கலப்பதக்கங்களை வென்றது.*

--------------

*பிரேசில் பாரா பேட்மிண்டன் போட்டியில் இந்தியா 9 தங்கம், 6 வெள்ளி, 7 வெண்கலப் பதக்கங்களை வென்றது.*

ஆடவர் ஒற்றையர் பிரிவில் *Vijender, Prem, Yashodhan* ஆகியோரும், மகளிர் ஒற்றையர் பிரிவில் மணிஷாவும் தங்கப்பதக்கம் வென்றனர்.

ஆடவர் இரட்டையர் பிரிவில் *Aryan - Thakkar* இணையும், *Yashodhan – Deeraj* இணையும், *Prem – Kuldeep* இணையும், கலப்பு இரட்டையர் பிரிவில் *Prem – Manisha* இணையும், மகளிர் இரட்டையர் பிரிவில் *Manisha – Andrew* இணையும் தங்கப்பதக்கம் வென்றனர்.

------------

காமன்வெல்த் டேபிள் டென்னிஸ் சாம்பியன் போட்டியில் இந்தியா 6 தங்கம், 4 வெள்ளி, 8 வெண்கலப் பதக்கங்களை வென்றது.

புதுதில்லியில் நடைபெற்ற இப்போட்டியின் ஆடவர் மற்றும் மகளிர் ஒற்றையர் பிரிவுகளில் இந்தியா தங்கம், வெள்ளி மற்றும் வெண்கலப்பதக்கங்களை வென்றது.

மகளிர் இரட்டையர் பிரிவிலும், கலப்பு இரட்டையர் பிரிவிலும் இந்தியாவிற்கு தங்கப்பதக்கம் கிடைத்தது.

--------------

விக்டோரியன் ஓபன் ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் *Sanya Vats* வெள்ளிப்பதக்கம் வென்றார்.

மகளிர் ஒற்றையர் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

----------------

*Saint Louis* செஸ் போட்டியின் மூன்றாவது சுற்று முடிவில் இந்தியாவின் *Praggnandhaa* ஐந்து புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளார்.

---------------

20 வயதுக்கு உட்பட்டோருக்கான உலக தடகள சாம்பியன் போட்டியில் பங்கேற்பதற்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

ரஞ்சித் குமார், *Ashish Yadav*, தரணீதரன் தியாகராஜன், பூஜா, *Tanu Choudhary* உட்பட 36 பேர் இதில் இடம்பெற்றுள்ளனர்.

இப்போட்டி, அமெரிக்காவின் *Eugene*-ல் நாளை மறுநாள் தொடங்கி, வரும் 9-ஆம் தேதிவரை நடைபெறவுள்ளது.

-----------------

***கிளாஸ்கோவில் நடைபெற்ற காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளின் பளுதூக்கும் பிரிவில் பதக்கங்களை வென்றவர்களுக்கான பரிசுத் தொகையை மத்திய அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா இன்று புதுதில்லியில் வழங்கினார்.***

***-----------------***

***உலக ஜூனியர் ஸ்குவாஷ் சாம்பியன் போட்டி அடுத்த ஆண்டு சீனாவின் Chengdu -வில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.***

***<<<<<<<END>>>>>>>***